VELS

KNOWLEDGE IS POWER

# வேல்ஸ்

அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்



(DEEMED TO BE UNIVERSITY Estd. u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்று 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம் - சென்னை - இந்தியா

வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழ்

மாணவ இதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு



மாண்புமிகு தமிழக முதல்வர் **திரு எடப்பாடி கே பழனிச்சாமி** அவர்களுக்கு
மலர்ச்செண்டு வழங்கி இனிது வரவேற்றிடும்
வேல்ஸ் வேந்தர் ‘கல்வித் திருமகன்’ **டாக்டர் ஐசரி கே கணேஷ்** அவர்கள்


சிறகு : 6 இறகு : 9
07, அக்டோபர் 2020
பருவமுறைப் பறப்பு

வெளியீடு :
தமிழ்த்துறை,
மொழிகள் புலம்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்



# VISION and MISSION

**Dr. Ishari K. Ganesh**
M.Com., M.B.A., M.L., Ph.D.

Chancellor
VELS University

**Founder - Chairman**
VELS Group of Institutions

## Our Vision

Vels University strives to be a beacon of excellence in higher education by effectively providing its students with high standards of education and rigorous training with ample scope for the all-round development of the personality of the students and to promote positive change and social justice for the betterment of society.

## Our Mission

Vels University endeavours to provide relevant academic programs of theory & practical-oriented knowledge in order to empower the students to achieve professional and personal success in today's competitive, diverse and dynamic society by providing excellent research-support facilities, coaching by experienced faculty, excellent infrastructure, and collaborative research; fostering a culture of assessment, accountability, academic integrity and life-long learning.

## Quality Assurance

Vels University has established a system of Quality Assurance to monitor and enhance the quality of education. Quality Advisory Committee and Internal Quality Assurance Cell are constantly working towards this goal.

**வேல்ஸ்**

அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்



(DEEMED TO BE UNIVERSITY Estd. u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்று 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம் - சென்னை - இந்தியா



**டாக்டர் ஐசரி கே.கணேஷ்** எம்.காம்., எம்.பி.ஏ., எம்.எல்., பிஎச்.டி.,

**நிறுவனர் - வேந்தர்**

## நம்பிக்கைச் சிறகால் இதையும் கடந்திடுவோம்...!

" நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் "

என்னும் தமிழ் மூதுரையின் அருமையினை ஒட்டுமொத்த உலகமும் உணர்ந்து வாழும் காலம் இது! இந்தக் கொரோனாச் சூழல், நமக்குப் பல புதிய வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறது! அறிவியல் தொழில்நுட்பத்தின் புதுப்புதுப் பக்கங்கள் இன்றைய சமூக விலகல் காலத்தில் 'இணையவழி' என்றாகி நிற்கின்றன; 'இணையமே வழி' என்னும் நிலையே எங்கும் நிலவிக் கொண்டிருக்கிறது!

இன்றைய சூழலின் சவால்களை, நம் வேல்ஸ் கல்விக் குழுமம் தக்க வகையில் எதிர்கொண்டு, இனிதே வெற்றி கண்டு வருவது இங்குச் சிறப்பாகக் குறிக்கத்தக்கது! சென்ற கல்வியாண்டின் இறுதியிலேயே இணையத்தின் வழியாக நிறைநிலை ஆண்டு மாணவர்களுக்கான இறுதித் தேர்வுகளை முறையாக நிகழ்த்தித் தேர்வு முடிவுகளையும் வெளியிட்டுள்ள முன்னோடி நிறுவனமாக நம் வேல்ஸ் திகழ்வதில் நான் பெருமிதம் கொள்கின்றேன்! இக்காலக் கட்டத்தில் நூற்றுக்கணக்கான பன்னாட்டுக் கருத்தரங்கங்கள் உள்ளிட்டவற்றை இணைய வழியாக நடத்தியிருப்பதை எண்ணி இன்புறுகின்றேன் !

இந்திய அளவிலான தர மதிப்பீட்டில் கிரேடு ' ஏ ' என்னும் உயர் நிலையைப் பெற்று, ஒரு முன்மாதிரிப் பல்கலைக்கழகமாக விளங்குகின்ற நம் வேல்ஸ், அடுத்தடுத்த இந்தியத் தரச்சான்று அங்கீகாரங்களையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது ! நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான உயர்கல்வி நிறுவனங்களுக்கு இடையில், நம் வேல்ஸ் பல்கலைக்கழகம் அகில இந்திய அளவில் 'இந்தியா டுடே' இதழின் தர மதிப்பீட்டில் 28 ஆவது இடத்தையும் 'டைம்ஸ் இன்ஜினியரிங்' இதழின் தர மதிப்பீட்டில் 20 ஆவது இடத்தையும் வென்றிருப்பது, நம் வேல்ஸின் சாதனைத் தடங்கள் எனப் பெருமிதம் கொள்கின்றேன்!

கொரோனா பெருந் தொற்றை எதிர்த்து அயராது போராடிவரும் செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், காவலர்கள் எனும் முன்னணி வீரர்களின் குடும்பத்து 300 மாணவச் செல்வங்கள் நம் வேல்ஸில் படிப்பதற்குக் 'கட்டணமில்லாக் கல்வித் திட்டத்தை' இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தி, உதவி வழங்கப்பட்டுள்ளதை, அவர்கள்தம் தியாகத்திற்கான எளிய நன்றிக் காணிக்கையாக எண்ணிப் போற்றுகிறேன்! வேல்ஸ் வளர்ச்சியில் என்றும் துணை நிற்கின்ற நம் பணியாளர்கள்தம் வாழ்வு மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு, 'வேல்ஸ் பணியாளர் நலச் சங்கம்'அண்மையில் தொடங்கப்பட்டுள்ளதனை இங்குப் பதிவாக்கி மகிழ்கின்றேன்!

புதிய அனுபவச் சூழலில் இந்தக் கல்வியாண்டு இனிதே தொடங்கியிருக்கின்றது! இணைய வழி வகுப்புகள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. மாணவர்கள் கல்வி வளாகத்திற்கு வந்து பயிலும் வழக்கமான கல்விச் சூழல் விரைவில் மலரும் என நம்புகிறேன்! வேல்ஸின் புதுவரவு வசந்தங்களாம் முதலாண்டு மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து மாணவச் செல்வங்களும் ஒளிமயமான எதிர்காலத்தினைப் பெற்றுச் சிறக்க என் உளங்கனிந்த நல் வாழ்த்துகள்!

வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் புதிதாகப் பொறுப்பேற்று அணி செய்துகொண்டிருக்கும் தகுதிமிகு கல்வியாளர்கள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ் ஸ்ரீமன் நாராயணன் அவர்கள், பதிவாளர் பேராசிரியர் பி சரவணன் அவர்கள், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பேராசிரியர் ஏ உதயகுமார் அவர்கள், ஆலோசகர் (தர மதிப்பீடு) பேராசிரியர் பி சுவாமிநாதன் அவர்கள் உள்ளிட்ட நம் வேல்ஸின் புது இணைவு அன்பர்களுக்கு என் நல்வாழ்த்துகளை உரியன ஆக்குகின்றேன்!

இங்கிலாந்தின் 'இலண்டன் ஸ்கூல் ஆஃப் எக்கனாமிக்ஸில்' எம் பி ஏ பட்டம் பெற்றுத் திரும்பியுள்ள எங்களின் அன்பு மகள் செல்வி பிரீத்தா கணேஷ், வேல்ஸ் கல்விக் குழுமத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மையை இனிது வரவேற்கின்றேன்; இளம் தலைமுறையின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்திடும் அவருக்கு என் உளங்கனிந்த நல்வழ்த்துகளை உரியதாக்குகின்றேன்!

நம் வேல்ஸ் மாணவச் செல்வங்களின் படைப்புத் திறனை, கலை ஆற்றலை, அறிவியல் ஆக்கத்தைத் தக்க வகையில் அடையாளம் கண்டு, அவர்களை இதழ் அரங்கினில் உதய தாரையாக அறிமுகப்படுத்திடும் எழுச்சிப் பணியைத் தம் பொறுப்பில் ஏற்று, 'வேல்சு சிறகு'வாயிலாக அதனைத் திறம்படச் செயல்படுத்திவரும் வேல்ஸ் பல்கலைத் தமிழ்த்துறைப் பேராசிரிய நண்பர்களுக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்!

'வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழாக' வழக்கம்போல் இந்த ஆண்டும் 07.10.2020 அன்று சிறகு விரிக்கும் 'வேல்சு சிறகினை' வாஞ்சையுடன் சிந்தை விரல்களால் வருடும்போது, மென்மையான பசுமைப் பக்கங்கள் பலவாய் என் எண்ணத் திரையில் வண்ணக் காட்சிகளாகி இதம் சேர்க்கின்றன! உங்கள் அனைவரின் தூய அன்பும் ஒத்துழைப்புமே இவை அனைத்தையும் சாத்தியமாக்கி உள்ளன என்பதை எண்ணி மகிழ்கின்றேன்!

(ஐசரி கே.கணேஷ்)

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு

**மாணவ இதழ்**

புரவலர்

கல்வித் திருமகன்

முனைவர் **ஐசரி கே. கணேஷ்**

நிறுவனர்– வேந்தர்

காப்பாளர்

பேராசிரியர் **ஆ. ஜோதி முருகன்**

துணைத்தலைவர்

மாணவப் பதிப்பாசிரியர் குழு

க.ஆறுமுகத்தாய் – சட்டவியல், ஏ.கே. சக்தி – பொருளியல், பி. சாய் ருத்ரா – கணினி அறிவியல், இரா. அஜெய்ராஜ் காட்சித் தொடர்பியல்,

க. நித்திய கல்யாணி // உயிரிவேதியியல், இர. பிரகாஷ் // காட்சித் தொடர்பியல், எம். ஐஸ்வர்யா /// தகவல் தொழில் நுட்பம் த. பாலாஜி / உயிரி கணினியியல்,

வி. ஹேமலதா – பயன்பாட்டுக் கணினியியல் , ந.ரிஸ்வானா யாஸ்மீன் – வணிக மேலாண்மை, அஷ்மிதா வரைகலை,

கோ. தங்கராஜ் – வணிகவியல், ஸ்ரீ.பரமகல்யாணி – உயிரித் தொழில் நுட்பம், பி. அரவிந்தன் – வரைகலை, மீரா ஆங்கில இலக்கியம்,

ரா.கீதா // நுண் உயிரியல், தாரணி // உயிர் வேதியியல், க.பவித்ரா // வணிகவியல், பி.ஸ்ரீகவி ரஷிணி // இயற்பியல்,

த.விக்ரம் // கணினிப் பயன்பாட்டியல், சிவா // வணிக நிர்வாகவியல்

**சிறப்பாசிரியர்**

பேராசிரியர் **ப. மகாலிங்கம்**

புலமுதல்வர், மொழிகள் புலம்

**பொறுப்பாசிரியர்**

திரு. **ரா.ராஜா**

உதவிப் பேராசிரியர்

**பதிப்புச் செயன்மையர்**

முனைவர் **வெ. சிவசங்கர்**

தமிழ்த்துறைத் தலைவர்

**பதிப்பு நெறிமையர்**

முனைவர் **பெ. மோகன்**

இணைப் பேராசிரியர்

**பதிப்பு ஆற்றுப்படுத்துநர்**

முனைவர் **ம. பிரபாகரன்**
உதவிப் பேராசிரியர்

முனைவர் **க. கமலா**
இணைப்பேராசிரியர்

முனைவர் **சி. கமலக்கண்ணன்**
உதவிப் பேராசிரியர்

திரு. பொ.குபேந்திரன், முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்,
முனைவர் வே. கண்ணதாசன், முனைவர் தே. தேன்மொழி,
முனைவர் சி. மார்கண்டன், முனைவர் அ. இருதயராஜ், முனைவர் எ. பச்சையப்பன்,
முனைவர். ம. பிரகாஷ், முனைவர். என். தீபாராணி, முனைவர். எஸ். பிரியா,
முனைவர் கி. துர்காதேவி, முனைவர். யு. துர்காதேவி,
உதவிப்பேராசிரியர்கள், தமிழ்த்துறை


வெளியீடு:

**தமிழ்த்துறை – மொழிகள் புலம்,**

**வேல்ஸ் அறிவியல் தொழி நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,**

**பல்லாவரம், சென்னை–600 117**

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

வேல்ஸ் பல்கலைக்கழகம்

சிறகு:6
இறகு:9

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு

07 அக்டோபர், 2020

மாணவ இதழ்

## இதழ் பேசுகிறது...

நம் வேல்ஸ்பல்கலைக்கழகத்தின் வேல்ஸ்குடும்பநாளாக, நம் வேந்தர் அவர்களின் பிறந்தநாளைகொண்டாடும் இந்நன்னாளில்மொழிகள்புலத்துத் தமிழ்த் துறையின் வெளியீடாக நம் வேல்ஸ்மாணவர்களின் படைப்பிதழாக, இக்கல்விஆண்டின் முதல்-பருவஇதழாக 'வேல்ஸ்சிறகு' இதழ்உங்களைநோக்கி சிறகடித்துபறந்துவருகிறதுசிந்-தனைவிருந்தமுதைதரவருகின்றது.

இக்கொரானாபரவல்காலச் சூழ்நிலையில் நம் வேல்ஸ்பல்கலைக்கழகத்தில் இணைய வகுப்புகள் வாயிலாக மாணவர்களுக்கு, கற்றல்- கற்பித்தல் பணிநடைப் பெற்றுவரும் இவ்வேளையிலும் கூட நம் வேந்தர் அவர்களின் பிறந்தநாள்அன்று வேல்ஸ்சிறகுஇதழ்வரஇருப்பது குறித்த செய்தியினை தெரிவித்தவுடன், மாணவர்கள்-தங்கள்மேலானபடைப்புகளைதத்தமது துறை பேராசிரியர்களின் உதவியோடு-ம்தமிழ்த் துறைப் பேராசிரியர்களைதொடர்புகொண்டும்மாணவர்கள்தங்கள-துபடைப்புகளைமின்னஞ்சல் (Email)மூலமாகவும், புலனம் (whatsup)வாயிலாகவும் தங்களதுபடைப்புகளைப்பதிவேற்றம் செய்து அனுப்பி வைத்தமையைப் பார்க்கும் போது படைப்புச் சிந்தனையின் மீதும் தமிழிலக்கியத்தின் மீதும், அவர்கள்கொண்டுள்ள பேரார்வத்தையும் படைப்பாற்றல்திறனையும் என்னவென்று சொல்வதென்றே தெரியா-மல்நம்மைதிகைப் படையசெய்யும் வகையில் இருந்தமையைக் காணமுடிந்தது.எச்சூழ் நிலையியையும் எதிர் கொள்ளும் நம் மாணவர்கள்கொரானாபேரிடர் காலச் சூழலிலும் தன்னம்பிக்கையோடுசமூகப் பொறுப்புணர்வோடுஇருப்பதைஅவர்கள் தம் படைப்பின் வழிஅறியமுடிந்தது.

நம் பல்கலைக்கழகவேந்தர் அவர்கள்கொரானாபேரிடர் காலத்தில்தன்னுயிரையும் பொருட்படுத்தாதுமக்களைகாக்கும் பணியில்ஈடுபட்டுமகத்தானசமூகசேவைநல்கியநம் மருத்துவர்கள், செவிலியர்கள், காவலர்கள், மற்றும் தூய்மை தொழிலாளர்கள் ஆகியே-ாரைகௌரவிக்கும் முகமாகஅவர்களின் பிள்ளைகளுக்கும் பொருளாதாரத்தில்நலிவுற்ற இதரஏழைமாணவர்களுக்கும் இலவசகல்விவழங்கப்படும் என்றுஅறிவித்தவேந்தர் அவர்களின் சமூகபொறுப்புணர்வை நம் மாணவர்கள்எண்ணிப் போற்றும் வகையிலும், வேந்தர் அவர்களின் தன்னலம் கருதாஉயர்ந்த உள்ளத்தின் வெளிப்பாட்டை பெருமி-தத்தை பறைச்சாற்றும் விதமாக நம் வேல்ஸ்பல்கலைக்கழகமாணவர்களும் அவர்கள் தம் படைப்பின் வழியேகொரானா பேரிடர் காலத்தில்மகத்தான சேவையாற்றி யோரைசிறப்பிக்கும் வண்ணம் அவர்களைப் பற்றிய ஓவியங்களும் கவிதைகளும் கட்டுரைகளும் இவ்விதழில்படைத்தளித்துள்ளனர்.

இக்கொரானாபேரிடர் காலச் சூழலிலும் நம் வேல்ஸ் மாணவர்களின் படைப்பாளுமைதிறன் தடைபடுதல்கூடாது என்ற உயர்ந்த உள்ளத்தோடும் சீரியசமூக சிந்தனையோடும் 'வேல்ஸ்சிறகு'மாணவர்படைப்பிதழ் வெளி வருவதற்குஊக்கமளித்து மாணவர்களின் எதிர்காலத்தின் மீது அக்கறையுணர்வோடுஅவர்களின் நல்வாழ்விற்கு துணை நிற்கும் வேந்தர் அவர்களின் தன்னலமில்லாஉயர்ந்த உள்ளத்தினைஎண்ணி வணங்குகிறேன். என் சிரம் தாழ்ந்த நன்றியினைஉரித்தாக்குகிறேன்.

சிறகுவிரிப்பில்உங்களுடன்

**திரு. ரா. ராஜா**

பொறுப்பாசிரியர்- வேல்சுசிறகு



# வேல்ஸ் பல்கலைக்கழக வாழ்த்துப் பாடல்

பேராசிரியர் **ப.மகாலிங்கம்**
புலமுதல்வர், மொழிகள் புலம்
வேல்ஸ் பல்கலைக்கழகம்

ஆர்த்திடும் அலைகடல் ஞானத் திருக்கோயில் வாழிய வாழியவே!
கீர்த்திமிகு நம் வேல்ஸ் பல்கலைக்கழகம் வாழிய வாழியவே!

ஆயிரம் ஆயிரம் பல்திசை மாணவர் நாடி
ஆளுமை பெற்றிடும் சங்கமச் சமுத்திரம்!
பாயிரப் புகழ் மைந்தர் கணேச வள்ளல்தம்
தந்தை வேலனார் நினைவில் நிமிர்ந்த கல்வி இமயம்!
வாழிய வாழியவே!

பன்னோக்கில் மின்னேர் பொறியியல் மருத்துவம் சட்டம் வணிகம்
அறிவியல் ஆய்வு எனவளர்
கல்வி நூறென அணிசெயப் புதுமைக் கனிந்திடும்
வேல்ஸ் பல்கலைக்கழகம்!
பன்னாடும் பாரதமும் தமிழ்நாடும் இருபால் மாணவத்தால்
இணைந்து நிற்க மண்ணில் தெரியுது வேல்ஸ் வானம்!
வாழிய வாழியவே!
சமநீதி சமூகநீதி மனிதம் போற்றும் மூச்சுக் காற்றால்
சாதனை படைக்கும் நம்பிக்கைப் பூஞ்சோலை!
வாழிய வாழியவே!

அன்னை வேல்ஸ் வளர்த்த மாணவச் செல்வங்கள்
சமுதாய வானமெங்கும் மின்னும் நட்சத்திரங்கள்!
மேன்மை விளைத்திடும் வேல்ஸ் எனும் பல்கலைக் குடும்பம்
கால்கொண்டதுவோ சென்னைப் பல்லாவரத்தில்!
புத்தெழில் தாழம்பூரில் மணம் பரப்பிப் புது உதயத் தெலுங்கானாவில்
படர்ந்தோங்கி,
நானிலம் போற்றிட இந்தியமாக வளரக் காண்போம்!
வளரக் காண்போம்!
நித்தமும் புதிதாய்ப் பிறந்திடும்
நித்தமும் புதிதாய் வளர்ந்திடும்
வித்தக மாணவர் அறிவு எழுச்சியின்
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!!!

# கொரோனா



**கொரோனா**

உதித்த ஐந்து ஆறு திங்களில்
உலகமே கண்டு மிரள
உத்வேகமோ, சிறிதளவு கூட மாறவில்லை
அது காணாத கண்டம் இல்லை
செய்யாத கொலைகள் இல்லை
அதன் ஆசை மட்டும் ஏனோ இன்றும் தீரவில்லை
ஊரடங்கும் அதனாலே
உற்ற உயிர்சேதங்களும் அதனாலே
முகமூடியும் அதனாலே,
முதன் முதலில் ***sanitizer*** பயன்படுத்தியதும் அதனாலே,
சுகாதார முறைகளை பேணுவதும் அதனாலே,
இதுவரை காணாத,
சில புதிய கல்வி முறைகளும் அதனாலே!!
கட்டுபாடு தளர்வு ஒரு புறம் இருக்க,
கடந்து செல்லுவோம் இதையும் என்று மறுபுறம்
அனைவரின் எதிர்பார்ப்பும்,
கொரோனாவின் கடைசி நோயாளி
குணமடையும் நாளை எண்ணியே!
ஆர். மீனா இரண்டாம் ஆண்டு. பிஎஸ். சி தகவல் தொழில் நுட்பம்.

# கொரோனா கட்டுப்பாடு

கொரோனாவே!
யார் மீது உனக்கு கோபம்?
பார் மீது ஏனிந் சாபம்?

பள்ளிகளை மூட வைத்தாய்
தள்ளித் தள்ளி ஓட வைத்தாய்
என் வீட்டை வாட வைத்தாய்
உன் பாட்டைப் பாட வைத்தாய்

முகத்துக்கு கவசம் அணி
ஒரு மீட்டர் தூரம் இனி
கை கழுவும் பாணி தனி
கை கொடுக்கும் காலம் இனி

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
கூடி வாழ ஏங்குகிறோம்
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஆண்டவனை வேண்டுகிறேன்

என். முத்து லெட்சுமி இரண்டாம்
ஆண்டு. பிஎஸ். சி தகவல்
தொழில் நுட்பம்.




# என் அன்பே

கவிதையாக நான்
வழி தெரியாமல்
நானோ வாடுகிறேன்
என் நிலை தெரியாத
நீ
என்னை வாட்டுகின்றாய்
உன் பொய்யான அன்பினால்

பிரியதர்ஷினி, இரண்டாம் ஆண்டு
எல்,எல்,பி,

# கொடிய நோய்- கொரோனா

கொடிய நோய்- கொரோனா
எங்கு பார்த்தாலும் மக்களின் பயம் கொரோனா!
எங்கு கேட்டாலும் மரணத்தின் பெயர் கொரோனா!
எல்லா நாட்டையும் அச்சுறுத்தும் கொரோனா!
எங்கள் நாட்டையும் அதிர வைத்த கொரோனா!

உன்னால் வீட்டில் அடைந்து கிடைக்கின்றோம்,
உயிரை காக்க தனிமை படுத்தி கொள்கின்றோம்,
உன்தன் விளைவுகளை கண்டு அஞ்சுகின்றோம்,
உலகம் காக்க அந்த இறைவனை வேண்டுகின்றோம்

ஏழை மக்களாக இருந்தாலும்,
ஏழு கடல் தாண்டி வாழ்ந்தாலும்,
உன்னை தொட்டவரை நீ விட்டதில்லை!
உடல் சுத்தம் கொண்டவரை நீ தொட்டதில்லை!

கொரோனாவே! உன்னிடம் இருந்து எங்களை காக்க
கொடிய நோயே! உன்னை முற்றிலும் நாங்கள் அழிக்க
நித்தம் நித்தம் போராடிக் கொண்டிக்கிறோம்.

வினிஷா பார்த்திபன் பி.காம்., (பொது) முதலாமாண்டு இ-பிரிவு





சே. பைந்தமிழ் ராகவி
முதலாம் ஆண்டு உயிரி தொழில் நுட்பம்

# இளைஞர்களும் இந்திய ஒருமைப்பாடும்

பாரத நாட்டில் பல மொழிகள், பல மதங்கள், பல இனங்கள் இருந்தாலும் பாரதப் பண்பாடு ஒன்றே. இதனையே பாரதியார்,

**"முப்பது கோடி முகமுடையாள் எனில் உயிர்**
**மொய்ம்புற ஒன்றுடையாள் இவள்**
**செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்**
**சிந்தனை ஒன்றுடையாள்"**

எனப் பாடுகிறார். இன்றைய இளைஞர்கள் நாளைய பாரதத்தின் ஆட்சியாளர்கள். அவர்கள் தம் இளம் பருவத்திலேயே ஒருமைப்பாட்டின் அவசியத்தை உணர்ந்து செயலாற்ற வேண்டும். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது இளைஞர்கள் உணர வேண்டும்.

**அகப்பகையும் புறப்பகையும்**

இந்திய ஒருமைப்பாட்டைக் குலைத்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேட முற்படும் நாட்டுப் பகைவர் பெருகியுள்ளனர். அவர்களுக்கு அன்னிய நாடுகள் சில ஆயுதங்களும் பொருளும் கொடுத்து உதவி அழிவுச் சக்திகளைத் தூண்டுகின்றன. இளைஞர்களில் ஒரு பிரிவினர் அத்தகைய அழிவுச் சக்திகளில் அகப்பட்டுக் கேடு விளைக்கின்றனர். இந்தியாவின் அகத்தேயும் புறத்தேயும் பகைகள் பெருகியுள்ளன. பஞ்சாபிலும் அசாமிலும் பிரிவினைச் சக்திகள் ஊடுருவிக் கேடு விளைவிக்கின்றனர்! எல்லையில் பாகிஸ்தானியரும், சீனரும் ஆயுதங்களைக் குவித்துத் தொல்லை தருகின்றனர்.

**இளைஞர் கடமை**

இளைஞர்கள் நம் பாரத நாட்டின் வரலாற்றை ஒரு முறை படிக்க வேண்டும். ஒற்றுமையின்மையால் வாணிகம் செய்ய வந்த வெள்ளையர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு நம்மை அடிமைப்படுத்தினர். இதனை இளைஞர்கள் உணர வேண்டும். ஒற்றுமையே வலிமை என்பதை உணர வேண்டும். அன்னியர் கொடுக்கும் போதைப் பொருளுக்கு அடிமையாகி இந்தியரின் ஒற்றுமைக்குத் துன்பம் விளைவித்தல் கூடாது. இந்தியர் உடலால் பலராகத் தென்பட்டாலும் உணர்வாலும், உயிராலும் ஒருவர் என உணர்ந்து இயங்க வேண்டும். சாதி, இனம், மொழி, மதம் போன்றவற்றில் வேறுபாடு கொண்டு சண்டை சச்சரவு கொள்ளக் கூடாது. இளைஞர் மன்றங்கள் அமைத்து இந்திய ஒருமைப்பாட்டைக் காக்கும் வழிமுறைகளை கண்டறிந்து செயல் படுத்த வேண்டும். பள்ளியில் கல்லூரியில் பலவற்றில் சேர்ந்து தொண்டாற்ற வேண்டும். நாட்டு நலப்பணித் திட்டத்தில் சேர்ந்து சிற்றூர்களுக்குச் சென்று இந்திய விடுதலை வரலாற்றை மக்களுக்கு எடுத்துக் கூறி ஒற்றுமை உணர்வை ஊட்ட வேண்டும். இந்தியரின் உடைமை இந்தியா; இதனைக் காப்பது அனைவரின் கடமை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**முடிவுரை**

உயர்ந்தோர், தாழ்ந்தோர் வேறுபாடு நீங்கவும், சாதி வேற்றுமை ஒழியவும் இளைஞர்கள் கலப்பு மணம் புரிந்து கொண்டு வேறுபாட்டினைக் களைய வேண்டும். தீண்டாமையைப் பூண்டோடு ஒழிக்க முற்பட வேண்டும். வேற்றுமைகளை அறவே ஒழிக்க இயலாமல் போனாலும், அவற்றிடையே ஒற்றுமை காண முயற்சிப்பது இன்றைய இளைஞர் சமுதாயத்தின் இன்றியமையாக் கடமையாகும்.

# தாயை நேசி!!

F) 'B'



புரண்டு படுத்தால் நான் இறந்து விடுவோமோ
என்று கருவில் இருந்த நமக்காக
தூக்கத்தை கூட தொலைத்துவிட்டு இரவில்
விழித்திருந்த "சூரியன்"– அம்மா

தாய்மையின் வலி எனக்கும் தெரியும்...
அதனால்தான் அன்று அம்மாவுடன்
சேர்ந்து நானும் அழுதேன்
நான் பிறக்கையில்...

நீ கனவில் கண்ட பெண்ணைவிட!!
உன்னை கருவில் சுமந்த
தாயை நேசி!!

பூமி நம்மை தாங்கும் முன்னே
நம்மை பூப்போல் தாங்கியவள்
நம் அம்மா!!

உலகில் தேடி தேடி அழைத்தாலும்
மீண்டும் அமர முடியாத சிம்மாசனம்
தாயின் கருவறை...

கே. ஆனந்த கிருஷ்ணன்
இரண்டாமாண்டு பி.காம் (ஹ/

# இயற்கை



மனிதன் பேசும் வார்த்தை எல்லோருக்கும் புரியும்,
ஆனால் இயற்கை பேசாத மௌனம் இயற்கை
நேசிப்பவருக்கு மட்டும் புரியும்,
கவலையும் கண்ணீரும் மனிதனை சாக சொல்லும்,
ஆனால் இயற்கை மட்டும் - அதனை ரசிக்க;
இந்த மண்ணில் வாழச் சொல்லும்!
இயற்கைக்காக நான் எப்பொழுதும் இருப்பேன்-
அதனை ரசிக்கவும்! வளர்க்கவும்!!!

தே. மதுமிதா
உயிரி தொழில் நுட்பவியல்
முதலாம் ஆண்டு

# சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்



**முன்னுரை**

சங்ககால வரலாற்றை அறிய இலக்கியக்ள் மட்டும் துணை புரிந்தன. இன்று கல்வெட்டு துணை புரிகின்றன என்று ஐராவதம் மகாதேவன் கூறுகிறார்.

**கல்வெட்டு செய்தி**

**"அம்மண்ணன் யாற்றும் செங்கயேின் உரைக்கோ ஆதன் செல்லிரும் பொறை மகன் பெருங் கடுங்கோன் மகன் இர்னல் கடுங்கோ (இ)னங்கோ ஆக அறுத்தான்"**

என்று எழுதப்பட்டிருந்தன.

**கல்வெட்டால் அறியும் சங்க கால வரலாறு**

அக்கல்வெட்டில் சேரன் இரும்பொறை அவன் மகன் பெருங்கடுங்கோள், அவன் மகன் இளங்கடுங்கோ அவன், மகன் இளங்கோ என்று சேர மன்னர்களின் பெயர்கள் குறிப்பிட்டதை அறியலாம்.

**புகளூர்க் கல்வெட்டு தமிழே**

புகளூர்க் கல்வெட்டில் ழ, ள, ற, ன ஆகிய எழுத்துக்கள் உள்ளன. அதனால் இக்கல்வெட்டு பிராகிருத மொழியல் எழுதப்பட்டது என்றை அறியலாம்.

**முடிவுரை**

சங்க கால வரலாற்றை இலக்கியங்கள் மட்டும் கூறவில்லை கல்வெட்டும் கூறுகின்றன என்ற செய்நிலை அறியலாம்

இரா. சஞ்சய்,முதலாமாண்டு.,. வான் பரப்பியல் பிஎஸ்.சி.

*1st year B.Sc.*

# மைதானம்

டி. விக்ரம்
தகவல் தொழில் மூன்றாமாண்டு

வெண்ணிலா விளையாட
விண்வெளி மைதானம்
பெண்ணிலா விளையாட
புல்வெளி மைதானம்
அலைகள் விளையாட
கரைகள் மைதானம்



காற்று விளையாட
பூமி மைதானம்
கண்கள் விளையாட
இமைகள் மைதானம்
மீன்கள் விளையாட
கடல்கள் மைதானம்
நானும் நீயும் விளையாட
இப்பூவுலகமே மைதானம்...

# அம்மா குழந்தை உறவு...



## அம்மா குழந்தை உறவு...

கருமையும் வண்ணங்களாக தெரியும்,
சோகமும் சுகமாக மாறும்,
கண்ணீர் துளிகளும் புன்னகையாய் பூக்களாகும்,
புரிந்ததும் புரியாமல் போகும், புரியாததும் புரியும்...
நான் உன்னை பார்க்கும் அந்த நிமிடம்

வைஷாலி. சக்திவேல்
ரெண்டாமாண்டு பி[illegible]





முனைவர் யு. துர்கா தேவி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை

## உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி அலுவலகத்தில் சரி, மனித, உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரியதாகாமலும் இருக்க.

- ❖ நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை ***(Ego)*** விடுங்கள்.
- ❖ அர்த்தமில்லாமலும் வீண் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் ***(Loose Talk)***
- ❖ எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள். ***(Diplomacy)*** விட்டுக் கொடுங்கள் ***(Compromise)***
- ❖ சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத் தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் ***(Tolerance)***
- ❖ எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- ❖ உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியால் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். ***(Flexibility)***
- ❖ மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள் ***(Courtesy)***
- ❖ புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும்



## சாலை

சாலை நீ வயதானாலும்
இளமையாய் இருக்கிறாய்!
உன்னில் ஏற்றத்தாழ்வு இருந்தாலும்
அனைவருக்கும் நீ பொது...!

வேகமாக இருப்பவர்க்கு நீ
பொறுமையைக் கற்றுத் தருகிறாய்!
உன்னிடத்தில் இருக்கும் மரங்கள்
எனக்கு இயற்கையை நினைவூட்டுகிறது

மழை உனக்கு நண்பன்
உன்னிடம் தங்கியிருக்கிறது
என்னில் உன் நினைவு
உன் வழியே
நான் என் கல்லூரிக்குச்
செல்லும் வழி..

ப. சந்தியா
இரண்டாம் ஆண்டு ஆங்கில இலக்கியம்



## முதல் பார்வை

இரயில் வண்டியில் நானும் செல்ல,
ஏனோ மாறுது என் மனமும் மெல்ல
அதை விவரிக்க என் மனதில் வார்த்தை
இல்ல
எங்கும் இறங்கும் இடம் இல்லாமல் இறங்கி
விட்டேன் ஏதோ ஒரு நிறுத்தத்தில்
ஏன் இந்த திடீர் மாற்றம்
இறைவன் செய்த சதி தான் இதுவோ?
மின்னலே திடீர் என வந்தாய் என் மனதில்
வர்ணிக்க முடியவில்லை உன் அழகை
சொல்ல

ரா. அஜிதா
பி.எஸ்.ஸி., பி.எட்

## மனசாட்சி

உன் வாழ்வின் உற்ற நண்பன்
உன் நிறை குறைகளைக் கற்ற நண்பன்!
உன் அகத்தின் கண்ணாடி
அதுவே வாழ்க்கையில் முன்னோடி!
உண்மைகளை உனக்கு உரைக்க செய்யும் ஆசான்
அதன் சொல்படி நடந்தால் நீயே உனக்கு ஆசான்!

தி. தாரணி
இள்ங்கலை மூன்றாம் ஆண்டு
உயிரி வேதியியல்



## சூரியன்

கண்கள் கூசியது
அவள் வருகை கண்டு
இரத்தம் சீறி பாய்ந்தது
அவள் கதிரை உண்டு
மனமோ சொல்ல ஏங்கியது
மறையாதே என்னோடே இரு என்று!

சுமேரா பாத்திமா
இளங்கலை இரண்டாம் ஆண்டு
ஆங்கில இலக்கியம்



# தேச தியாகிகள்



என். முத்துலட்சுமி

தகவல் தொழில் நுட்பம் இரண்டாம் ஆண்டு




ஜோதிஸ்வரன்

வணிகவியல் முதலாமாண்டு






**அனில்சிங்**

**தகவல் தொழில்நுட்பம், இரண்டாமாண்டு**




யுவஸ்ரீ

வணிகவியல் முதலாமாண்டு



# சமூக நல ஓவியங்கள் (கொரானா)



ஸ்வீதா
பிகாம் வணிகவியல் முதலாமாண்டு




மோனிகா
பிகாம் வணிகவியல் முதலாமாண்டு




முல்லைப் பூவிழி
சட்டத்துறை, இரண்டாமாண்டு

# சேவையை போற்றுவோம்!



முத்து லெட்சுமி,
இரண்டாமாண்டு, தகவல் தொழில் நுட்பம்




அரிகரன்,
முதலாமாண்டு, வணிகவியல்



### மூச்சித்திணரும் அதிகாரங்கள்...

ஆசிரியர்கள் தோப்புக்கரணம்
போட்டுக்கொண்டிருக்கிறார்கள்...



பேசுவது கேட்கிறதா?

பேசுவது கேட்கிறதா?

கேட்கிறதா பேசுவது?

இன்னும் இரண்டொரு தடவைக்
கேட்டப்பின்பு
பதில் சொல்வோம்

வயிறுக்குலுங்க
சிரித்துக்கொண்டே
மாணவர்களின்
பதில் பேசாமல்
பழிவாங்கும் படலம்...

வகுப்பிலும் அடங்காத ஒருசில மாணவர்கள்
வழக்கம் போலவே வகுப்பிற்குள்
வந்துவிட்டு அவரவர் வேலையைப் பார்க்கிறார்கள்...

வருகைப்பதிவேட்டிற்காய் வந்த மாணவர்கள்
கைப்பேசியை உள்ளே அனுப்பிவிட்டு
அவர்கள் வெளியே
வெளியே போய்விடுகிறார்கள்...

ஒரே நேரத்தில்
வகுப்பிற்கு உள்ளேயும் இருக்கிறார்கள்
வகுப்பிற்கு வெளியேயும் இருக்கிறார்கள்
வீட்டுக்கு உள்ளேயும் இருக்கிறார்கள்
வீட்டுக்கு வெளியேயும் இருக்கிறார்கள்

இது ஆன்லைன்
தசாவதாரங்கள்

பேசாதே...

பேசாதே...

### வாயை மூடிக்கேள்

கண்ணை
அங்கு இங்கு
அலையவிடாமல்
கவனி...

நான் கேட்கும்
கேள்விக்கு மட்டும்
பதில் சொல்

சொல்வதைக் கேட்டுக்
குறிப்பெடுத்துக்கொள்

எங்கே நோட்டு
எங்கே பேனா
ஏன் லேட்டு

வகுப்பில்
தூள்பரந்த ஆசிரியர்களின் அதிகாரமும்
சேர்த்துத்தான்
கொரானா வார்டின்
அவசர சிகிச்சைப் பிரிவில்
மூச்சித்திணறிக்கொண்டிருக்கிறது
ஆன்லைன் வகுப்பாய்...

முனைவர் ம.பிரபாகரன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,



# எரிபொருள்

எரிபொருளின் முதல் பயன்பாடு கிட்டதட்ட இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மரப்பட்டை அல்லது குச்சிகளை எரிப்பதாகும். மனித வரலாற்றின் பெரும்பகுதி முழுவதும், தாவரங்கள் அல்லது விலங்குகளின் கொழுப்பிலிருந்து பெறப்பட்ட எரிபொருள்கள் மனிதர்களால் மட்டும் பயன்படுத்தப்பட்டன. கி.மு.6,000 முதல் உலோகங்களை உருக்குவதற்கு பயன் படுத்தப்படுகிறது. 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய காடுகள் குறைந்து விடத் தொடங்கியதால் இயற்கை எரிவாயு எண்ணெய் நிலக்கரியிலிருந்து பெறப்பட்ட கோக் மூலம் மட்டுமே இது மாற்றப்பட்டது. கரி ப்ரிக் வெட்டுகள் இப்போது பொ-துகவாக பார்பிக்யூ சமையலுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. பின்னர் நிலக்கரி கப்பல்கள் மற்றும் என்ஜின்களை இயக்க பயன்படுத்தப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில், நிலக்கரியிலிருந்து எடுக்கப்படும் எரிவாயு லண்டனில் தெரு விளக்குகளுக்கு பயன்படுத்தப்பட்டது. 20 மற்றும் 21ஆம் நூற்றாண்டுகளில், நிலக்கரியின் முதன்மை பயன்பாடு 2005ஆம் ஆண்டில் உலகின் மின்சார விநியோகத்தில் 40 சதவீதத்தை வழங்கியதாகும். புதை படிவு எரிசக்தி ஆதாரங்களின் நீர்சக்தி போன்றவற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. உலகில் உள்ள பெரும்பாலான நாடுகள் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக, சூரியசக்தியையும் காற்று சக்தியையும் புதைபடிவு எரிபொருட்களை பயன்படுத்துவதால் அவை நமது சமகால சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாகி விட்டன. அவை பாரம்பரிய எல்.பி.ஜியை விட அதிக செறிவு மற்றும் சுறுசுறுப்பானவை. காய்கறி எண்ணெய், டீசல் என்ஜின்களிலும் எண்ணெய் பர்னர்களிலும் மாற்று எரிபொருளாகப் பயன்படுத்தலாம். நேரடியாக எரிபொருளாகப் பயன்படுத்தப்படுவது மாற்றியமைக்கப்பட்ட அல்லது மாற்றப்படாத கருவிகளில் இது காய்கறி எண்ணெய் (எஸ்.வி.ஒ) அல்லது தூய தாவர எண்ணெய் (பி.பி.ஒ) என குறிப்பிடப்படுகிறது. வழக்கமான டீசல் என்ஜின்கள் மாற்றியமைக்கப்படலாம். காய்கறி அணுவாக்கலை அனுமதிக்கும் அளவுக்கு குறைவாக இருப்பதை உறுதி செய்ய உதவும். இது கார்பனை உருவாக்குவது. இது மூலம் இயந்திரத்தை சேதப்படுத்துவதிலிருந்து தடுக்கிறது. காய்கறி எண்ணெய் வழக்கமான டீசலுடன் கலக்கலாம் அல்லது பயோடிசல் அல்லது பயோலிக்விட்களை பயன்படுத்தலாம். தற்போதைய போக்கு, புதுப்பிக்கதக்க எரிபொருட்களை நோக்கி வருகிறது. ஹைட்ரஜன், கால்சியம் கார்பைடு, காற்று அலைகள், சூரிய சக்தி, புவி வெப்பம், ஆல்கஹால் மற்றும் காய்கறி எண்ணெய் போன்ற உயிரி எரிபொருள்கள் போன்றவை பயன்படுத்தலாம்.

“மரம் வளர்ப்போம்
உலகைக் காப்போம்“

**– தே. நரசிம்ம ராகவன்**
**பி.காம் ‘பி’**

# அம்மா

தாயின் அன்பு சொல்ல வார்த்தைகள்
இல்லை. பூமி தாங்கும் முன்னே
என்னை பூ போன்று தாங்கியவள் தான்
அம்மா! ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
நான் தலை சாய தேடுகிறேன்
என் தாயின் மடியை!
மீண்டும் ஒரு ஜென்மம் நிம்மதியாய்
தூங்க நினைக்கிறேன் என் தாயின்
கருவறையில்! பாதுகாப்புடன் என்னை அரவணைத்த
தாயே! காலம் தோரும் சாய வேண்டும் உன்
அழகிய மார்போடு, நீ தரும் முத்தத்திற்காக...



**எஸ். உமாமகேஸ்வரி**
**பி.காம். இரண்டாம் ஆண்டு**



வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்' டாக்டர் ஐசரி கே கணேஷ் - இணைவேந்தர் டாக்டர் ஆர்த்தி கணேஷ் ஆகியோர் தம் திருமண வெள்ளி விழாவில், இணையரையும் மக்கட் செல்வங்களையும் வாழ்த்திடும் உலகநாயகன் திரு கமலஹாசன் அவர்கள்




பசுமை நிறைந்த நினைவுகளில் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கணேஷ் அவர்களுடன் வேல்ஸ் முன்னாள் மாணவர் சங்கத்து இளம் சாதனைச் செம்மல்கள்; உடன் இணைவேந்தர்கள் டாக்டர் ஆர்த்தி கணேஷ், பேராசிரியர் ஆ. ஜோதி முருகன், வேல்ஸ் குழுமத் துணைத்தலைவர் செல்வி பிரீத்தா கணேஷ் ஆகியோர்

# வேல்ஸ் வேந்தர்
# 'கல்வித் திருமகன்' இணையரின்

## வாழ்த்துப் பாமாலை

## திருமண வெள்ளிவிழாத் திருநாள்

25

10.02.2020

**கல்வித் திருமகன்**
டாக்டர் **ஐசரி கே. கணேஷ்**
கல்யாணத் திருமகனாக
டாக்டர் **ஆர்த்தி கணேஷை**
கரம் பிடித்து
வலம் வந்த அந்த
வசந்தத்தின்
தொடக்கக் காலம்...!
கடந்து வந்த பாதையில்
பசுமை நினைவுப் பூக்களின்
அணிவகுப்பு வரிசை
இதோ... இதோ...

அது என்ன?
மாநாடா? பேரணியா?
தேர்த் திருவிழாவா?
வண்ணமயமாகத் திகழும்
சென்னை,
கலைவாணர் அரங்கத்தில்
நடப்பதுதான் என்ன?

ஓ! தமிழக முதல்வர்
**புரட்சித் தலைவி**
**அம்மா** அவர்கள்தம்
மாண்புறு தலைமையில்
**கணேச வள்ளல்**
**ஆர்த்தி நல்லாள்**
**திருமன்றல் திருவிழாக்**
கொண்டாட்டம்தான் அது!
எதிர்கால
வேந்தரின் திருமணம்
என்பதாலே
அரசு விழாப்போல
நடந்த பிரமாண்டத்தின்
கண்கொள்ளாக் காட்சிகள்...!

தந்தை சொல் மிக்க
மந்திரமில்லை என – தம்
**தந்தை வேலனார்** பெயராலே
கல்விக் கூடங்களும்
பல்கலைக் கழகமும் அமைத்தவர்!
தலைமுறைகள் கடந்தும்
தந்தையின் பெயரை மந்திரமாக
உச்சரிக்க வைத்தவர்!
அன்பு அன்னை
**புஷ்பா வேலனார்**தம்
பூரிப்பில் இனிமை காணும்
இவ்வுயர் கல்வித் திருமகன்
சாதனையில்
ஓர் இமயம்...!

கல்வி வள்ளல்
**கணேச மைந்தரை**
வலம் வந்து... வலம் வந்து...
அம்மையப்பர்களே
தம் பிள்ளைச் செல்வங்களுக்கு
ஞானப்பழம் பெற்றிடும்
வேலன் குன்றத்துக்
கிழக்குச் சூரியன்!

நலம்சூழ் குடும்பத்து
கல்விசால் தந்தை
**ஜோதி முருகனார்**
**அன்னை சந்திராவின்**
பண்பாட்டுப் பண்ணையில்
அல்லியுடன் பூத்த முல்லை!
**ஆர்த்தி** எனும் ஆளுமைசேர்
அருங் குணத்துக் கிள்ளை!

**கணேச நம்பியோடு**
**ஆர்த்தி நங்கையென**
இருவரும் இணைந்த
விருப்பத்து வேள்வியில்
இல்லற மாண்பாய்
விளைந்த பயன்களோ
ஏராளம்...! ஏராளம்...!

இந்தக் கல்வி சாம்ராஜ்ஜிய
இணையருக்குப்
பெயர் சொல்லும்
பிள்ளைகளாய் வாய்த்த
தத்துவ முத்துக்களோ
மூன்று நட்சத்திரங்கள்!
அன்புத் திருமகள்கள்
**பிரீத்தா, குஷ்மிதா** எனும்
இளவரசிகள்!
அருந்தவத்து மைந்தன்
**சர்வேஷ்** எனும்
இளவரசன்!

நீங்கள் காட்டிடும்
பாங்குறு பாதையில்
நாங்களும் இனி
உடன் சேர்ந்து நடக்கிறோம்
என்றிடும் நம்பிக்கையே
பாசப் பெற்றோர்க்கு
நேச மக்கள் தரும் – இந்த
**வெள்ளி விழாப் பரிசு...!**

அதன் புது உதயம்தான்
இலண்டனில் தான் பெற்ற – சீரிய
மேலாண்மைக் கல்வியால்
வேல்ஸ் குழுமத்தில்
புதுமைகள் பல புகுத்தி
உச்சத்தைத் தொட விழையும்
ஆற்றல் வடிவத்து
மூத்த மகளாய்
செல்வி **பிரீத்தா கணேஷ்...!**

மூத்தத் திருமகளின்
அரவணைப்பில்
பிள்ளைகள் மூவராலே
எல்லாமும் எல்லாமும்
நல்ல வண்ணம்
முழுமை எய்தும்...!
இளையோர் மாண்பால்
**வேல்ஸ்**
எந்நாளும் எந்நாளும்
**கல்வி வள்ளல் கணேசனார்**
பெயரைச் சொல்லும்!
புகழால் வெல்லும்!!

**நல்ல குடும்பம்**
**பல்கலைக் கழகமாய்**
வளரக் காண்போம்...!
வளர் பிறையாய்
முழு நிலவாய்
ஒளிரக் காண்போம்...!

**வேல்ஸ் கல்விக் குழுமம்**
எனும் பெயரால்
திரை கடலுக்கு அப்பாலும்
புகழ்க்கொடி நாட்டும்
இவரின் கல்விப் பணி...!
**வேல்ஸ் பிலிம் இண்டர்நேஷனல்**
எனும் பெயரால்
திரை உலகு எங்கிலும்
வெற்றிக் கொடி நாட்டும்
இவரின் கலைப் பணி !
இதுவே எங்கள்
சகலகலா வல்லமை
வேந்தரின்
தனிப் பாணி...!!

நன் மக்கட் பேற்றுடன்
மனை மாட்சி மங்கலத்தால்
நாயகியின் கரம் பிடித்து
**மன்றல் வெள்ளி விழா**
காணும் வெற்றி நாயகரே!
**ஐசரி வேலனார்**
**அன்னை புஷ்பாவின்**
குலக் கொழுந்தே!
மூவர்தம் பாசத்து
மூத்த உடன்பிறப்பே!

குவலயம் வாழ்த்தும்
**கல்வித் திருமகனே!**
தமிழகத்துப் பல்கலைக்கழகங்களுள்
தரணி போற்றும் **இளம் வேந்தரே!**
நீர் வாழ்க...!
நின்னொடு மனையாளும்
மக்களும் சுற்றமும் வாழ்க!
வேல்ஸ் குழுமமும்
வாழ்க! வாழ்க! பல்லாண்டே!!

இதய வாழ்த்துகளுடன்,

| | | |
|---|---|---|
| பேராசிரியர் **பி.சுவாமிநாதன்** | பேராசிரியர் **எஸ்.ஸ்ரீமன் நாராயணன்** | பேராசிரியர் **ஏ.ஆர்.வீரமணி** |
| துணைவேந்தர் | இணை துணைவேந்தர் | பதிவாளர் |

புல முதல்வர்கள், இயக்குநர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவியர்

## வேல்ஸ் பல்கலைக்கழகம்

பல்லாவரம், சென்னை - 600 117

ஆக்கம் : பேராசிரியர் **ப.மகாலிங்கம்**
மொழிகள்புல முதல்வர்




வேல்ஸ் பொதுமைப் பொங்கல் விழாச் சிறப்பு விருந்தினர் நாட்டுப்புறக் கலைஞர்-திரையிசைப் புகழ் திருமிகு வேல்முருகன் அவர்களுடன் இணை வேந்தர் பேராசிரியர் ஜோதி முருகன் அவர்கள், துணைவேந்தர், பதிவாளர், மொழிகள் புல முதல்வர், நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்டோர்



வண்ணக் கோலப் பொங்கல் முற்றத்தில் வேல்ஸ் கல்வி குழுமத் துணைத்தலைவர் செல்வி பிரீத்தா கணேஷ் அவர்களின் மகிழ்ச்சிப் பொங்கலுடன் பேராசிரியர் ஆர் ஏ கலைவாணி அவர்களும் வேல்ஸ் கல்விக் குழும மகளிரும்




பொதுமைப் பொங்கல் வாழ்த்துகளுடன் உதயமாகிடும் கலைப் பொங்கல்- 'வேல்ஸ் நட்சத்திரா 2020'; அதற்கான பதாகையை அறிமுகப்படுத்துகிறார் வேல்ஸ் கல்விக் குழுமத் துணைத் தலைவர் செல்வி பிரீத்தா கணேஷ் அவர்கள்



வேல்ஸ் மகளிர் திருநாளின் சிறப்பு விருந்தினர் பேராசிரியர் பர்வீன் சுல்தானா அவர்களுடன் இணை வேந்தர் டாக்டர் ஆர்த்தி கணேஷ் அவர்கள்




உலகத் தாய்மொழித் திருநாள் விழாவினை ஒளி விளக்கு ஏற்றித் தொடங்கி வைக்கும் துணைவேந்தர் பேராசிரியர் பி.சுவாமிநாதன் அவர்கள், இணை துணை வேந்தர் பேராசிரியர் எஸ் ஸ்ரீமன் நாராயணன் அவர்கள் உள்ளிட்டோர்




வேல்ஸ் 'மாதிரி நீதிமன்றப் போட்டிகள்' நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினர் சென்னை உயர் நீதிமன்ற மாண்பமை நீதியரசர் திரு.ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களுடன் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்கள் ; உடன் இணை துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீமன் நாராயணன், சட்டப்புல முதல்வர் பேராசிரியர் எஸ். அம்பிகா குமாரி உள்ளிட்டோர்

காற்றிற்கு திசையில்லை
செல்லும் வழி இல்லை
தனக்கென்று இலக்கில்லை
அவற்றிற்கு உயிரும் இல்லை
ஆயினும் உயிர்கொண்டு வாழும்
மனித உடலுக்கு உயிர் ஊட்டுகின்றதே!

- சீ. சுபிக்ஷா
பி.ஏ ஆங்கிலம் முதலாம் ஆண்டு

எனக்கு கிடைத்த செல்வமாக உன்னைக் கருதவில்லை
எனக்கு கிடைத்த அதிர்ஷ்டமாக உன்னைக் கருதவில்லை
என்னுடைய உயிர் என்று உன்னைக் கருதமாட்டேன்
என்னுடைய உலகம் என்று உன்னைக் கூறமாட்டேன்
எனவே என்னுடைய ஆத்மா நீயாவாய்
ஏனென்றால் அவை ஒருநொடி கொண்டு அழியும்
என் ஆத்மாவோ நொடியும் உன்னைக் கொண்டிருக்கும்.

- சீ. சுபிக்ஷா
பி.ஏ ஆங்கிலம் முதலாம் ஆண்டு



# நீரை காப்போம்

வறண்ட என் வாழ்வில்
தண்ணீராய் வந்தாய்
தாகம் தனித்தாய்,
உன்னை ரசித்தேன், ருசித்தேன்,
சேமிக்க மட்டும் மறந்தேன்
இன்று நீ(ர்) இல்லாமல் தவிக்கிறேன்....
உன்னை பிரிந்து கண்ணீரில் தத்தளிக்கிறேன்...
என் துயர் மறைக்க மழையாக
வா வெண்ணிலவே...
ஒவ்வொரு துளியையும் சேமிப்பேன்...
இனி ஒரு போதும் வீணாக்க மாட்டேன்...



**லோ. தீபிகா**

**இரண்டாம் ஆண்டு இளங்கலை**

# விழித்திடு! எழுந்திடு!

காலைக் கதிரவன்
கண் விழிக்கின்றான்
தன் கடமையைச் செய்திட....

ஓடி ஆடி உழைத்திட
அதோ உயர பறந்து செல்கிறது
பறவையினது கூட்டம்

வானின் நிறைத்தைக் காத்திட
சுற்றி தவழ்ந்துச் செல்கிறது
வெண்பஞ்சு மேகங்கள்... / வெண் மேக பஞ்சுகள்

சேரும் இடமறிந்தே
சென்று கொண்டே
இருக்கிறது நதிகளின் கூட்டம்

இளைஞனே!
இன்னும் ஏன் நீ மட்டும்
விழித்திராமல் உறக்கம்
கொள்வதேனோ?...

விழித்திடு! எழுந்திடு!
உனக்கென உள்ள
கடமையை தேடி முடித்திடு
ஒவ்வொரு நாளும்.

- ரா. ராஜா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை



# பாரதியார்



இந்திய நாடு
என்னும் நிலத்தில்
வெள்ளையர்கள்
என்னும் விஷப்
பூச்சிகளிடமிருந்து
இந்திய பயிரைக் காக்க
போராட்டத்தை
விதைத்த
முதல் உழவன்.

**லோ. தீபிகா**
**இரண்டாம் ஆண்டு இளங்கலை தகவல் தொழில் நுட்பம்**

# விவசாயி



வி - யர்வை
வ - டிந்து
சா - குபடி
வ'யி' - ற்றை நிரப்புவான் விவசாயி

உயிர் தந்தவன் ‘இறைவன்‘
உண்ண உணவு தந்தவன்
‘உழவன்‘

**வைஷாலி, ச.**
**பி.பார்ம்**

# பெண்மை



வீழ்வேனென்று நினைத்தாயோ

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?"

"கொண்டவன் மரித்தால்
நீயும் உடன்கட்டை ஏற வேண்டும்"

கொழுந்திட்டு எரியும் தீயில் பிடித்து
உள்ளே தள்ளிய காலம்
உருண்டோடி விட்டது ...
சுவடுகள் செத்து சுண்ணாம்பாகிய வருந்தத்தக்க ஞாபகங்கள் அவை.

பெண் வரைபடம்

"வாசல் தாண்டி வெளிவராதவளே பத்தினியாம்"

பெண்களின் கற்பை சோதித்த கயவர்களின் பேச்சுக்கள் காற்றோடு பறந்து விட்டன.

"கொலையும் செய்வாள் பத்தினி!"

ஆம்... எழுத்துக்கள் தீண்டினாலே குற்றமெனக் கருதப்பட்ட நிலைமைதனை விரட்டியடித்துவிட்டார்கள் எம்குலமுத்துக்கள்...ஏட்டுக்கல்வி கட்டாயமாக்கப்பட்ட-தனால் இளங்குருத்துகள் அடுக்களையில் வாட்டி எடுக்கப்படுவதில்லை.

பால்ய திருமணங்கள் ஒடுக்கப்பட்டதனால் சிறுமிகளின் கருவறைகள் நிறைந்தே சாகடிக்கப்படுவதில்லை... என்னவென்று தெரியாத போதிலே திருமணம் கழிக்கப்படுவதும் இறந்து போன சிறுவயது கணவனுக்காய் (??!) விதவைக்கோலம் ;பண்ட அறைக் கூண்டுக்குள்ளே அடங்கி உயிரை உருக்கி தன்னைத் தானே எமனுக்கிரையாக்கிக் கொள்வதும் அடியோடு அகன்றொழிந்து விட்டன இன்று!

பெண் பிள்ளைக்கு சொத்திலும் சம பங்குண்டு... சட்டங்கள் எங்களை கைப்பாவையிலிருந்து கை மாற்றின... சொல்வதை எல்லாம் கேட்டு நடக்கும் பணியாட்களாய் ஒடுங்கி இருந்த எம் வர்க்கம் மண்ணிலிருந்து துளிர்விடத் தொடங்கி அரும்புகள் மலர்ந்து மணம் வீசுகின்றன.

"சட்டங்கள் ஆள்வதும்
பட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள்
நடத்த வந்தோம்"

ஆடு மேய்க்கும் அப்பத்தாவிலிருந்து அரசாளும் அம்மா வரை அனைத்திலும் பெண்கள்! பெண்கள்! பெண்கள்! ஒவ்வொரு முறை தலைமைகளில் பெண்களின் பெயர்கள் பளிச்சிடும் போது இனம் புரியாத உணர்வு பெருமிதம் கொள்ளச் செய்கிறது... என்னவள் இவள்... என் குலம் மதிக்கப்படுகிறது.

"ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோர் எனக்கேட்ட தாய்"

தன் கனவுகள் மெய்ப்படாத ஒவ்வொரு தாய்மையும் நிறைவு கொள்கிறது... மகள்களின் முன்னேற்றத்தில் முக்தி பெறுகிறது.
பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்தால் பாவமென்று கொண்டது போய் நாடு காக்கும் நற்பணியில் இந்திய இராணுவத்தில் உணவு மறந்து உற்ற சுற்றம் துறந்து சேவையில் தன்னை மறக்கிறாள் பெண்.

நிலவை காட்டிச்
சோறு ஊட்டியவள்
நிலவிற்கே செல்கிறாள்!

செவ்வாய் தோசமென்று கொண்டோரே கேளுங்கள்... செவ்வாயிலும் வசிக்கப்போகிறோம் நாங்கள்..

"பெண்கள் நாட்டின் கண்கள்"

பேருந்தின் பின்பிறத்திலும் பயணச் சீட்டின் அடியிலும் எழுதி மறைத்தால் நீங்கள் கொண்ட ஆதிக்க வெறி ஒழிக்கப்படுவதில்லை... மாறாக எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனம் கொண்டு கடக்கிறாள் பெண்ணானவள் இன்னும் கூட தன் கனவுகளை மறந்து ஏதோ பிறந்தோம். ஊருக்காக வாழ்ந்தோம். கவலைகளை லட்சியங்களை புதைத்தோம் என்று வீழும் பெண்மை மீட்டெடுக்கப்படல் மிக மிக அவசியமே!

"கனவுகளை புதைத்த
கண்கள் வெளிச்சங்களால் தீண்டப்படுவதில்லை!"

பிறந்த குழந்தை, பேதைச் சிறுமிகள், இளம் பெண்கள், பெண்கள், வயதானவர்கள் பாரபட்சம் என்பதே இல்லை. வன்புணர்வு கொள்ளும் வெறியர்களுக்கு பெண்ணொருத்தி சிந்தும் இரத்தத் துளிகள் ஒவ்வொன்றிற்கும் ஆதிக்க சமூகம் பதிலாய் ஆக வேண்டும்.

இல்லையேல்,
இரத்த வாடைக்காக
மனித வேட்டையாடும் விலங்குகளாய்
பெண் வாடை கொள்ள
யுத்தம் செய்து மடிந்து வீழும்
அற்பர்களால் தோற்கடிக்கப்பட்டுவிடும்
நம் தாய் பூமி

உன் தாயும் உடன்பிறந்தவளும் அழுகிறாள் என்றால் வீறு கொண்டெழும் ஆண்மைக்கு அடுத்த வீட்டுப் பெண்கள் ஊறுகாயோ?

பெண்களை மதிக்கும் சமூகம்
தழைத்தோங்கும் இல்லையேல்
வேர்களைத் தீய்த்து
விழுதுகளை கொன்ற பாவத்தினால்
முளை மறந்து போகும் விதைகள்!!

பெண்ணே!
விழித்திரு!
விழி திறவா நிலையிலும்
உன்னைத் திறந்திடு!!

**– பொ. மகாலட்சுமி**
**இரண்டாம் ஆண்டு எம்.எஸ்.ஸி. வேதியியல்**

# நீரின்றி அமையாது உலகு

**முன்னுரை**

உலகில் மனிதன் தோன்றிய காலக்கட்டத்தில் விலங்குகளைப் போல் இயற்கையில் கிடைத்த காய்கள், கனிகள், கிழங்குகள், இலைதழைகள் ஆகியவற்றை உண்டு குகைகளில் வாழ்ந்து வந்தான். உணவு கிடைக்கும் இடத்திற்கேற்ப, நாடோடியாகவும் அலைந்து திரிந்தான். அக்காலகட்டத்தில் அவன் வாழ்க்கைப் போராட்டம் விலங்குகளுடன் மட்டுமே தொடர்புடையதாய் அமைந்தது. விலங்குகளை வேட்டையாடியும் உணவைப் பெற்றுக் கொண்டான்.

"நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"

என்று தொல்காப்பியரும் இவ்வுலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று கூறுகின்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நீர் பற்றிய குறிப்புக்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் ஏராளமாகக் காணப்படுகின்றன. சங்ககால மாந்தர்களின் அகவாழ்வீல், புறவாழ்வில், பண்பாட்டில், வழிபாட்டில், சடங்குகளில், உணவு உற்பத்தியில், சமூகத்தில் எனப் பல நிலைகளில் நீர் குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன. நீர் மேலாண்மை பற்றிய பொதுமைச் செய்திகளையும், அறிய வேண்டியது அவசியமாதலால் ஆய்வின் முதல் இயலானது மேற்கண்டவற்றை ஆராய்வதாக அமைகின்றது.

நீர் விளக்கம்

நீர் இயற்கை அளிக்கும் வரப்பிரசாதம் ஆகும். மழை மூலமாக மட்டுமே நீரைப் பெற முடியும். செயற்கையான எம்முறையிலும் நீரை உருவாக்க முடியாது. நீரை ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்திற்கு மாற்ற முடியுமே தவிர அதனை ஆக்கவே அழிக்கவோ முடியாது.

புவிப்பரப்பின் மேலுள்ள நீரானது ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்திற்கு தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது. தொடக்க காலத்தில் விடாமல் பெய்த மழையால் கடல்களும், ஆறுகளும், ஏரிகளும், கால்வாய்களும் உருவாயின. இவ்வாறு நீரானது தொடர்ந்து சுழற்சி நிலையிலேயே காணப்படுகின்றது.

நீர் திட, திரவ, வாயு என மூன்று நிலைகளிலும் காணப்படுகின்றது. சாதாரணமாக நீர் திரவ நிலையில் காணப்படுகிறது. ஒரு நிலையில் இருக்கும் நீரை மற்றொரு நிலைக்கு எளிதாக மாற்ற முடியும்.

**நீரின் தன்மை**

நீரின் முக்கியமான இயல்பு அதன் வெப்பம் தாங்கும் சக்தியே ஆகும். எவ்வளவு வெப்பம் கொடுக்கப்பட்டாலும் நீர் அவ்வளவு எளிதாக வெப்பத்தைப் பெற்று விடாது.

நிலம் அதிக அளவு குளிரோ - வெப்பமோ அடைந்து விடாமல் புவியின் சமச்சீர் வெப்பநிலையைப் பராமரிப்பதில் நுர் முக்கியப்பங்கு வகிக்கிறது. உயர்ந்த நிலப்பரப்பை மூழ்கடிக்கவும், பாறைகளையும்

உருமாற்றக்கூடிய தன்மையும் பெற்றதாக நீர் உள்ளது.

"இறு வரை புரையுமாறு இறுகரை ஏமத்து
வரை புரை உருவின் நுரை பல சுமந்து"

என்ற பாடல் வரிகள் மேற்கண்ட செய்திக்கு எடுத்துக்காட்டாய் அமைகிறது.

**நீரின் பயன்பாடு**

நீர் அன்றாட வாழ்வுக்குத் தேவையான அடிப்படைப் பொருளாகும். குடிக்க, குளிக்க, சமைக்க போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் பொருளாகவும் உள்ளது.

**விவசாயத்தில் நீர்**

நீர் வளத்தினைப் பொறுத்தே அவ்விடங்களின் வேளாண் விளைச்சல் அதிகரிக்கிறது. "பல வளரும் நாடுகளில் 65 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான நீர் விவசாயத்திற்கு பயன்படுகிறது. அதிலும் கார்ப்பரேட் விவசாயத்தை பின்பற்றும் இடங்களில் நீர் மிக அதிகம் தேவைப்படுகிறது"

**புவியின் தோற்ற வரலாற்றில் நீர்**

உலகின் தோற்றம் குறித்து ஆராயும் அறிஞர்கள் காலந்தோறும் பல விதமான கருத்துக்களைக் கூறி வந்தனர். உலகத்தோற்றம் குறித்த ஆய்வு இன்றளவும் கணிப்பு நிலையிலேயே உள்ளது. இச்செய்தியை ஒத்த கருத்துக்கள் நற்றிணையில் காணப்படுகின்றது.

"வானம் மூழ்கிய வயங்குஒளி நெடுஞ்சுடர்க்
கதிர் காய்ந்து எழுந்து அகம்கனலி ஞாயிற்று"

எப்போதும் கனன்று கொண்டிருப்பதை 'உள்ளகம்' என்று பாடல் குறிக்கின்றது. 'நெடுஞ்சுடர்க்கதிர்' என்பது மையத்தைச் சுற்றிலும் வெளிப்படும் தீக்கதிர்களைக் குறிக்கின்றது.

'வயங்கு கதிர் விரிந்த உரு கெழு மண்டிலம்'

விளங்குகின்ற கிரணங்கள் விரியப்பெற்ற அச்சம் தரும் ஞாயிறு என்று அகநானூறு குறிப்பிடுகின்றது.

உயிரினத் தோற்றத்தில் நீர்

புவித்தோற்றம், நிலத்தோற்ற அடுக்கமைவுகளில் நீர் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைப் பொருளாக விளங்குகின்றதோ அது போல உயிர்களின் தோற்றத்திலும் நீர்.

ஓரறிவுடைய உயிர்களான புல், மரம், செடிகொடிகள், தாவர இனங்கள் நீரிலிருந்து தோற்றம் பெறுகின்றன என்பதை,

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்பது அரிது"

என்று வள்ளுவர் கூறுகின்றார். வானிலிருந்து மழைத்துளி விழாவிடில் புல் பூண்டு கூட முளைக்காது என்று கூறுகின்றார்.

**நாகரிகத் தோற்றத்தில் நீர்**

தமிழ்நாட்டிலும் நதிக்கரைகளில் தான் நகரங்கள் உள்ளன. வைகை நதிக்கரையில் மதுரையும், தாமிரபரணி நதிக்கரையில் நெல்லையும், காவிரி நதிக்கரையில் திருச்சியும், தஞ்சையும் அமைந்துள்ளதை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

**மேலாண்மை - வரையறைகள்**

இன்றைய காலக்கட்டத்தில் மேலாண்மை என்ற சொல் அநேக இடங்களில் பயன்படுத்தப்படுகின்றது. தொழிற்சாலை, வணிக நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், மருத்துவத் துறைகள் எனப் பல துறைகளுடன் தொடர்புடையதாய் அமைகின்றது. மேலாண்மை என்பது கலையா? அறிவியலா? என்ற ஒரு கேள்வியும் எழுகின்றது. இதற்கு டெய்லர் பின் வருமாறு விளக்கமளிக்கிறார்.

**மேலாண்மை**

சமூக வள ஆதாரங்களில் ஒன்றாகத் திகழும் தரைப் பராமரிக்கும் நோக்கில் நீர் மேலாண்மை என்பது இங்கு பொருத்தப்பாடுடையதாகிறது.

"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற குறட்பா மேலாண்மைச் சிந்தனையை எடுத்தியம்புகிறது.

**முடிவுரை**

நாம் வாழக் கூடிய புவிக்கோளத்தை உருவாக்கித் தந்ததில் நீருக்கு முக்கிய பங்குண்டு. சூரியனிடமிருந்து பிரிந்து வந்த வாயுவுடன் கூடிய நெருப்புக் கோளத்தை குளிர்வித்து உயிர்கள் வாழக்கூடிய புவிக்கோளமாக உருமாற்றம் செய்து தந்தது நீரே ஆகும்.

**இ.ப. சமினாபர்வீன்**
**பி.ஏ., ஆங்கிலம் முதலாம் ஆண்டு**



# காவு வாங்கும் ஆழ்துளைக் கிணறுகள்



ஆழ்துளைக் கிணறுகள் பல உயிர்களை காவு வாங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதற்கான தொழில்நுட்பங்கள் பல உலக நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் அந்த மாதிரியான தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் ஆனால் தொழில்நுட்பங்கள் அதிக அளவில் அங்கரீக்கப்படவில்லை. மேலும் பெரும்பாலும் அந்த தொழில்நுட்பங்கள் பயன்படுத்துவதும் இல்லை.

இந்த மூடப்படாத ஆழ்துளைக் கிணறுகள் காவு வாங்கிய உயிர் ஒன்று, இரண்டு அல்ல. சுஜீத் வில்சன் என இந்த எண்ணிக்கை நீண்டு கொண்டுதான் இருக்கிறது.

இந்த விபத்தில் இறக்கும் குழந்தைகளின் வயது 2 முதல் 5 வரை இருக்கிறது. மேலும் இந்த விபத்தில் 70 சதவீதம் மேலான குழந்தைகள் இறந்த பின்தான் மீட்கப்படுகிறார்கள். 20 சதவீதம் குழந்தைகள் மட்டும்தான் உயிர் பிழைத்துள்ளனர். 10 சதவீதம் குழந்தைகளை பற்றி எந்தவித தகவலும் இல்லை.

தமிழ்நாட்டில் சுஜித் வில்சன் 80 மணி நேரம் போராட்டத்திற்கு பிறகு இறந்த நிலையில் தான் மீட்கப்பட்டான். அதற்கு முன் 150 அடி ஆழத்தில் பஞ்சாப் ஒரு ஆண் குழந்தை இறந்தது. இப்படி இந்த விபத்துகள் அதிகமாகி கொண்டுதான் இருக்கிறது.

செப்டம்பர் 2018இல் நாகப்பட்டினத்தில் 2 வயது குழந்தை 15 அடியில் சிக்கிக் கொண்டது. அந்த குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது. இப்படி உயிருடன் குழந்தை உயிருடன் மீட்கப்படுவது மிக குறைவு தான் இந்தியாவில்.

சீனாவில் 3 வயது சிறுவன் 90 மீட்டர் ஆழத்தில் சிக்கிக் கொண்டான். அவன் சில மணி நேர போராட்டத்திற்கு பின் உயிருடன் மீட்கப்பட்டான்.

அந்த மாதிரியான தொழில்நுட்பங்களை பயன்படுத்தினால் குழந்தைகள் இறப்பதை குறைக்கலாம்.

இந்தியாவில் கிட்டத்தட்ட 27 மில்லியன் ஆழ்துளைக் கிணறுகள் இருக்கின்றன. அதில் பாதிக்கு மேற்பட்ட கிணறுகள் தண்ணீர் இல்லாமல் மூடப்படாமல் இருக்கிறது. மேலும் இந்த மூடப்படாத கிணறுகளால் தான் இப்படிப்பட்ட விபத்துகள் நடைபெறுகிறது.

மேலும் இது தொடர்பாக 2010-ல் உச்சநீதிமன்றம் ஒரு வழிகாட்டு தலை வழங்கியுள்ளது. அதில் ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதற்கு, நில உரிமையாளர் எழுத்துப்பூர்வ அனுமதி அதற்கான அதிகாரியிடமிருந்து பெற வேண்டும் என கூறுகிறது.

மேலும் பயன்படுத்தப்படாத கிணறுகள் மூடப்பட வேண்டும் என கூறுகிறது. எத்தனை மக்கள் இதை பின்பற்றுகிறார்கள் என்பது கேள்விகுறியாக தான் உள்ளது.

இதை தடுப்பதற்கான மிகப்பெரிய பொறுப்பு அதை பயன்படுத்தும் மக்களாகிய நம்மிடம் தான் உள்ளது. மேலும் அரசும் விபத்துகளை தடுக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பயன்படுத்தாத கிணறுகளை மூடுப்பட அரசு உத்தரவிட வேண்டும். அதை பின்பற்றாதவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே மக்கள் தங்களின் பொறுப்பை அறிந்து பயன்படுத்தப்படாமல் இருக்கும் ஆழ்துளைக் கிணறுகளை ஒரு மூடி போட்டு மூட வேண்டும். ஒவ்வொரு மக்களும் முன்வந்து இதை செய்தாலே இப்படிப்பட்ட விபத்துகள் இனி நடக்காமல் தடுக்கலாம். எனவே இதை தடுக்க வேண்டிய பொறுப்பு நம்மிடம்தான் இருக்கிறது.

**க. ஆறுமுகத்தாய்**

**ஐந்தாம் ஆண்டு சட்டத்துறை**

**'அ' பிரிவு**




## தாய்

கருவில் சுமந்து கருவறையில் காத்து
என் கண்ணீர் உன் மடியில் விழ
உன் சிரிப்பு என் காதில் விழ
என்னை நீ கட்டித் தழுவ
அதில் மெய்மறந்தேன் உன்னைத் தழுவ
இந்த ஜென்மத்தில் உன் இரத்தத்தால் உருவாகி
அடுத்த ஜென்மத்தில் என் இரத்தத்தால் நீ
உருவாக...
காத்திருப்பேன் ஜென்ம காலம் வரை!

**– உ. பூமிகா**
**சட்டத்துறை,**
**முதலாம் ஆண்டு**



## அன்பு



அன்பு என்னும் உலகில்
நான் அனாதையாய்
நிற்கின்றேன்...

அரவணைக்க யாருமில்லை
அன்பு கொள்ள எவருமில்லை
அன்பனாய் இருக்க
ஆசை கொள்கின்றேன்

அந்நேரத்தில்
அந்நியனாய் ஆட்கொள்கிறேன்
ஏங்குகிறேன் அன்புக்காக
ஏனோ நானும்...

ஒரு தனி படகாய்
மிதக்கிறேன்
கரை சேர நினைக்கிறேன்.

கவலை என்னும்
கடலில் அகப்பட்டேன்
அலைகளும் அடிக்க
ஆழ்கடல் ஆட்பறிக்க...

ஆகாயத்தில்
ஒரு கானல் நீர் போல
கரைகிறேன்...

அன்பும் இரக்கமும்
இயல்பற்றது...
ஆசையாக
பாரம்தேடினேன்
கிடைக்கவில்லை...

**அழுதேன் உணர்ந்தேன்**
**அன்பு ஒன்றுதான்**
**அனாதை என்று**

**- நா. அருண்ராஜ்**
**பி.இ. (இசிஇ) இரண்டாம் ஆண்டு**






## மனிதனின் புத்தி

அடுக்கடுக்காய்
மாடிக் கட்டிடங்கள்
பறவைகள் மகிழ்ந்தன
உட்கார வசதியென்று
சட்டென்று மகிழ்ச்சி
விரைந்து பறந்தோடியது
அதீத அறிவியல்
தொழில்நுட்பத்தை.

**லோ. தீபிகா**
**இரண்டாம் ஆண்டு இளங்கலை தகவல் தொழில் நுட்பம்**

# கையடக்க கைப்பேசி

தினம் காலை விழித்ததும் விழியை தேட வைத்த பொருள் ஒன்று...

காதல் இல்லையெனில் எப்பொருளும் இல்லை, என இருந்த காலம் சென்று...

இப்பொருள் இல்லையெனில் காதல் ஒன்றில்லை என்றானது...

உறக்கத்திற்கு உறக்கம் தந்து விழித்திருக்க செய்த பொருளும் ஒன்று...

பயனாக பயணித்த பொருள் பலருக்கு...

ஆறாம் விரலாய் கையோடு ஒட்டிக் கொண்ட பொருளும் இதுவே....

அஃறிணை பொருளுக்கும் உயிருண்டு என காட்டிய பொருளும் இதுவே...

எட்டாம் அறிவாகவும் எட்டா நுணுக்கங்களை உள்ளடக்கிய பொருளும் இதுவே....

சோகமிகு பொழுதை கடக்க உதவிய பொருள் ஒன்று...

சோகம், பாசம், அன்பை நிலைமையில் (Status) காட்டிய பொருளும் இன்று... என் தாய் தமிழை காத்திட உதவிய கையடக்க கைபேசி இன்று...

**- எம்.எஸ். விஷ்ணுகுமார்**
**பி.இ. (இசிஇ)**
**இரண்டாம் ஆண்டு**



# கொரோனா வைரஸ்



*கொலை பாதக கொரோனா!*
*கொன்று குவிக்க வந்ததோ,*
*உடலணைத்தும் நிரம்பியே,*
*உருகுலைக்க செய்யுதே!*
*காற்றில் பயணிக்கும் உனக்குமே,*
*கட்டளை கொடுத்தது யாருடா?*
*மிச்சமுதி மக்களை விழுங்க,*
*நினைக்கும் அரக்கனை,*
*மிதித்து தள்ளி முயலுவோம்!*
*மதியை நாமும் முடுக்குவோம்!*
*முடங்கி விட்டோம் என எண்ணி*
*முறைத்து பார்க்கும் அரக்கனை*
*முயன்றே நாமும் கொல்லுவோம்!*
*முடிவு உண்டு அஞ்சிடோம்!*
*உணவு இன்றி வாடிட்டால்,*
*உலகை அழிப்போம் என்றோமே!*
*அழிவைத் தரும் உன்னையும்,*
*அறிவைக் கொண்டு விரட்டுவோம்!*
*கண்டதை உண்ணாமல்,*
*கருணையோடு பார்த்திட,*
*கடவுள் தந்த தருணமா?*
*கருத்துடன் யோசிப்போம்!*
*உடல் வேறு, உருவம் வேறு,*
*நாடுவேறு, நவில்வதும் வேறு,*
*உதிரம் ஒன்று, உணர்வும் ஒன்று,*
*இணையத்தால் இணைகின்றோம்!*
*நேசரக்கரம் நீட்டுவோம்!*
*தனை மறந்து, தன் மனை மறந்து,*
*தன்னையே தந்திடவும்!*
*செவிலியரின் செவி கேட்க,*
*சொல்கின்றோம் நன்றி!*
*உடனுறையும் உறவுக்கும்*
*உறக்கமில்லா மருத்துவர்க்கும்,*
*சொல்கின்றோம் நன்றி!*
*பரிதவிக்கும் மக்கட்காய்*
*பாரத்தோடு இறங்குகின்றோம்.*


**மோ. நர்மதா,**
**பி.எஸ்.ஸி உயிரி தொழில்நுட்பவியல்**
**இரண்டாம் ஆண்டு**

# காலப்பயணம்

காலப்பயணம் என்பது நிகழ்காலத்திலிருந்து இறந்த காலம் மற்றும் எதிர்காலத்திற்கும் காலம் கடந்து பயணிப்பது ஆகும்.

அல்பர்ட் ஐன்ஸ்டீன், காலப்பயணம் பற்றி பல்வேறு சோதனைகள் மேற்கொண்ட முதல் விஞ்ஞானி ஆவார்.

காலப்பயணம் பற்றிய தன் ஆராய்ச்சியில் ஐன்ஸ்டீன், நேரம் என்பது உலகளாவிய நேர ஓட்டத்துடன் தொடர்புடையது. ஐன்ஸ்டீன் நேர பயணத்தை மேற்கொள்ள முடியும். ஆனால் வினாடிக்கு 2,33,561 கி.மீ. வேகத்துடுன் பயணித்தால்தான் காலப்பயணம் சாத்தியம் ஆகும் எனக் கண்டறிந்தார். ஆனால், தற்போதைய காலக்கட்டத்தில் இது சாத்தியமற்றது. உலகின் மிக சக்தி வாய்ந்த ராக்கெட்டுகள் கூட வினாடிக்கு 10 கி.மீ வேகத்தில் மட்டுமே பயணிக்கும். காலப்பயணத்தை விண்வெளியில், பரவெளி அனுமான இணைப்பு (Wormhole) மூ லமாக சாத்தியம் ஆகும். ஆனால் இயற்கையான பரவெளி அனுமான இணைப்பு மிகவும் அரிதாகவே எழுகின்றன.

ஐன்ஸ்டீன் கோட்பாடு நேரப் பயணம் சாத்தியம் என்பதை நிரூபித்தது, அதற்கு ஒளியின் வேகத்திற்கு மேல் பயணிக்க வேண்டும். ஒளியின் வேகம் = $E = mc^2$

உலகின் பல விஞ்ஞானிகள் ஐன்ஸ்டீனின் கோட்பாட்டைப் பயன்படுத்தி காலப்பயண சாதனத்தை கண்டு பிடிக்க முயற்சிக்கின்றனர். ஆனால், தற்போதைய தலைமுறைக்கு அது சாத்தியமில்லை.

**– எம். அருண்ராஜ்**
**பி.காம் (ஈஎப்) ‘பி’ – பிரிவு**



# தமிழரின் வீரம்



## அன்பு கவிதைகள்

அம்மா
அன்பு, அக்கறை
அரவணைப்பு, பாசம்
நேசம், தியாகம் என எல்லா
உணர்வுகளையும் ஒரே
இடத்தில் பெற முடிந்தால்
அதுதான் உண்மையாக
வாழும் கடவுள்
'அம்மா'

வார்த்தைகள் இல்லாமல்
பேசினேன்
கண்கள் இல்லாமல்
ரசித்தேன்
காற்றே இல்லாமல்
சுவாசித்தேன்
கவலைகள் இல்லாமல்
வாழ்ந்தேன்
என் தாயின் கருவறையில் மட்டும்

உண்மையான அன்பு
இதயத்தில்
மலர்ந்து வாசம் கொள்ளும்
பொய்யான அன்பு
உதட்டில் மலர்ந்து
உதிர்ந்து போகும்

உண்மையான அன்பை
சொல்லி புரிய
வைக்க முடியாது
அந்த அன்புக்கு
உரியவர்கள் மட்டுமே
உணர முடியும்.
வாழ்வில் பணம் வந்து
போகும்.
நேரமும் முடிந்து போகும்
உழைப்பதற்காக வாழாதீர்கள்
வாழ்வதற்காக உழையுங்கள்
அனைவரிடமும் அன்பை
காட்டுங்கள்
முடியவில்லை எனில்
உங்கள் மீது அன்பு
வைத்துள்ளவர்கள் மீதாவது

அன்பை அள்ளி வழங்குங்கள்.
உன்னோடு நான் பேசாமல்
இருக்கும் வலியை விட
உன்னோடு பேச நினைக்கும் வார்த்தைகளை
எனக்குள் கட்டிப்போட்டு
நான் நொடிக்கு நொடி சாகிறேனே
அது தான் வலிக்கிறது.

உன்னை நான் இனி நினைக்க மாட்டேன்
என்று கூறிவிட்டு
உன் நினைவுகளோடு தினம் தினம்
சண்டையிட்டு தோற்கிறேனே அதுதான்
வலிக்கிறது
இனியும் இந்த யுத்தம் தொடர வேண்டாம்
என்னோடு பேசிவிடு
என்னை மீண்டும் வாழ விடு அன்பே

**எஸ். கீர்த்தனா**
**பி.காம் முதலாம் ஆண்டு**



# புதுமைப்பெண்கள்



**ரா. சந்தியா**

பி.ஏ. ஆங்கிலஇலக்கியம் ஐ ஆண்டு



**யாழினி**

B.SC,. IT 2nd year

# வேல்ஸ் பல்கலையின் உயர் பொறுப்பு ஏற்றுள்ள புது வசந்தக் கல்வியாளர்கள்



பேராசிரியர் முனைவர்
**எஸ் ஸ்ரீமன் நாராயணன்**
துணைவேந்தர்



பேராசிரியர் முனைவர்
**பி. சரவணன்**
பதிவாளர்



செல்வி **பிரீத்தா கணேஷ்**
வேல்ஸ் கல்விக் குழுமத் துணைத் தலைவர்



பேராசிரியர் முனைவர்
**பி. சுவாமிநாதன்**
ஆலோசகர் (தரமதிப்பீடு)



பேராசிரியர் முனைவர்
**ஏ. உதயகுமார்**
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்




மாநில அளவில் அருட்தந்தை மர்பி நினைவுக் கோப்பையை வென்று வாகை சூடிய வேல்ஸ் கால்பந்தாட்டக் குழுவினரை உற்சாகப்படுத்தும் வேந்தர் டாக்டர் ஐசரி கணேஷ் அவர்களுடன் வேல்ஸ் கல்விக் குழுமத் துணைத் தலைவர் செல்வி பிரீத்தா கணேஷ் அவர்கள், உடற்கல்வி ஆலோசகர், உடற்கல்வி இயக்குனர் ஆகியோர்



'வேல்ஸ் நட்சத்திரா 2020' கலைவிழாவின் சிறப்பு விருந்தினர்களுடன் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே.கணேஷ் அவர்கள் மற்றும் வேந்தரின் மைந்தன் செல்வன் சர்வேஷ் கே.கணேஷ்

'வேல்ஸ் நட்சத்திரா 2020' வெற்றிக் கலைக் குரிசில் மாணவச் செல்வங்களுடன் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள்






வேல்ஸ் வேந்தரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்ட வேல்ஸ் நாட்டு நலப்பணித் திட்டக் குருதிக் கொடை முகாமைப் பதிவாளர் பேராசிரியர் ஏ.ஆர்.வீரமணி அவர்கள் தொடங்கி வைத்தல்; உடன் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. ஜெகதீசன் அவர்களும் திட்ட அலுவலர்களும் மாணவத் தொண்டர்களும்

கொரோனா விழிப்புணர்வுக் களப்பணியில் மூதாட்டிக்குக் 'கபசுர நீர்' வழங்கும் வேல்ஸ் நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள்





வேல்ஸ் ரோட்டராக்ட் சங்கத்தின் ஆண்டுத் தொடக்க விழா; சென்னை கோல்டன் ஸ்டார் ரோட்டரி தாய் சங்கத்தாருடன் பதிவாளர் உள்ளிட்டோர்

'வேல்ஸ் பணியாளர் நலச் சங்கத்தைத்' தொடங்கி வைக்கும் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்கள்; உடன் இணைவேந்தர் பேராசிரியர் ஆ. ஜோதி முருகன், வேல்ஸ் துணைத் தலைவர் செல்வி பிரீத்த கணேஷ், துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீமன் நாராயணன், பதிவாளர் பேராசிரியர் பி. சரவணன் உள்ளிட்டோர்





வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்' டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்களின்
திரைக்கலை வெற்றிப் பயணப் பாராட்டு விழாவில்
மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களுடன்
மாண்புமிகு தமிழகச் செய்தித்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்




வேல்ஸ் குடும்பத் திருநாள் விழாச் சிறப்பு விருந்தினர் திருமிகு சைதை பி துரைசாமி
அவர்கள் 'வேல்சு சிறகு' இதழை வெளியிட, வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ்
அவர்கள் பெற்றுக்கொள்ளுகின்றார் ; உடன் வேந்தரின் அன்னையார்
திருமதி புஷ்பா வேலன் அவர்கள், இணை வேந்தர் டாக்டர் ஆர்த்தி கணேஷ் அவர்கள்,
இணை வேந்தர் பேராசிரியர் ஆ ஜோதி முருகன் அவர்கள்

# வேல்ஸ் சிறகுகள்
## Wings of Vels

# VELS
## GROUP OF INSTITUTIONS
*Marching Beyond 25 Years Successfully*

# VELS



INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY & ADVANCED STUDIES (VISTAS)
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)
PALLAVARAM - CHENNAI
ACCREDITED BY NAAC WITH 'A' GRADE

**MAHAVIR INSTITUTE OF MEDICAL SCIENCES (MIMS)**
VIKARABAD, HYDERABAD- TELANGANA
www.mahavirmedicalcollege.org

**MEGHNA INSTITUTE OF DENTAL SCIENCES (MIDS)**
NIZAMABAD, HYDERABAD - TELANGANA
www.meghnadentalcollege.com

**SRI VENKATESWARA**
DENTAL COLLEGE & HOSPITAL
Thalambur, Chennai
www.svdentalcollege.com

**VENKATESWARA**
NURSING COLLEGE
Thalambur, Chennai
www.venkateswaranursing.ac.in

**VELS**
VIDYASHRAM
CBSE
Pallavaram - Thalambur - Cantonment
www.velsvidyashram.com

**VAELS**
INTERNATIONAL SCHOOL
CISCE / CAIE
Injambakkam, Chennai
www.vaelsinternationalschool.com

**VELS**
INTERNATIONAL PRESCHOOL
Neelankarai, Chennai
www.velsinternationalpreschool.com

**VELS**
KINDER KIDS
No. 9, Dr. Ranga Road,
Mylapore, Chennai
www.velskinderkids.com

*VAELS Ravindra Bharathi Global School*
Tamilnadu, Karnataka, NCR, West Bengal

**SHRI ISARI VELAN MISSION HOSPITAL**
*A Comfort Care Centre*
150 Bedded Multi Speciality Hospital
www.velanhospital.com

**KINDLE KIDS**
INTERNATIONAL SCHOOL
SLF Building, 510 Thomson Road #B2-00, Singapore
www.kindlekids.sg

**CTC**
Cambridge Tutors College
LONDON
South Croydon, Greater London
www.ctc.ac.uk

